விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 267 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 27 வெள்ளிக்கிழமை (12.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

2025 ஆம் ஆண்டுக்கான
பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807
(C-3853)


# விஜேராம இல்லத்திலிருந்து வெளியேறினார் மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் விஜேராமவில் அமைந்துள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து நேற்று வெளியேறியுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலை ஒருபோதும் கைவிடமாட்டேன்
### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களுக்காக தனது அரசியலை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விஜேராம

15ஆம் பக்கம் பார்க்க

## வெளியேறுவதில் துக்கம் ஏதும் இல்லை
### ஷிரந்தி ராஜபக்ஷ

(கொழும்பு)

விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறுவதில் துக்கம் ஏதும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ

15ஆம் பக்கம் பார்க்க

## வதிவிடத்திலிருந்து வெளியேறிய சந்திரிகா, மைத்திரி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தமது உத்தியோகபூர்வ வதிவிடத்திலிருந்து நேற்று வெளியேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் (10) பாராளுமன்றில் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை இரத்துச் செய்யும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட நிலையில், அதனைச் சபாநாயகர் நேற்று முன்தினமே சான்றுரைப்படுத்தியிருந்தார்.

இதன்படி குறித்த சட்டம்

15ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் தலைவர் பிரபாகரனை மகிழ்ச்சியடைச் செய்யும் தருணம் இது
### மகிந்தவின் ஊடகப் பேச்சாளர்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருந்திருந்தால் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பார்" என மகிந்தவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறியமை தொடர்பில் ஊடகங்களிடம்

15ஆம் பக்கம் பார்க்க

## கஞ்சா கலந்த மாவாவுடன்
### யாழ்.மடத்தடியில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மடத்தடிப் பகுதியில் கஞ்சா கலந்த மாவாவுடன் 18 வயது இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## அதிகார துஷ்பிரயோகம் செய்ததற்கு மகிந்த வெட்கமடைய வேண்டும்
### அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி



(கொழும்பு)

அதிகார துஷ்பிரயோகம் செய்ததற்கு மகிந்த வெட்கமடைய வேண்டும். அத்துடன், பொது மக்களுக்குச் செய்த சத்தியத்தையே அரசாங்கம் இன்று நிறைவேற்றி வருவதாக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02ஆம் பக்கம் பார்க்க

## ஹெரோயினுடன் இணுவிலில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடம் இருந்து 110 மில்லிகிராம்

15ஆம் பக்கம் பார்க்க

## பாதாளக் கும்பலைச் சேர்ந்த மேலும் 15 உறுப்பினர்கள் வெளிநாடுகளில் கைது

(கொழும்பு)

இலங்கையின் பாதாள உலக குற்றக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த மேலும் 15 பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கைகள் ரஷ்யா, ஓமான், ஐக்கிய அரபு எமிரேட்ஷ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இடம்

02ஆம் பக்கம் பார்க்க

## வீதியால் சென்றவரிடம் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றவரை வழிமறித்துத் தாக்கி அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## குரும்பசிட்டியில் வாள்வெட்டு குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி, தெல்லிப்பளை வைத்தியசாலை வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட குழு ஒன்று குடும்பஸ்தர் மீது இந்த வாள்வெட்டுச் சம்பவத்தினை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான தர்மராசா தினேஷ்குமார் (வயது-32) பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நிலையில் தெல்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இதற்குஅமைய 16.08.2025ல் நடைபெறாத பின்வரும் கிளைகளுக்கான கிளைக்குழு தெரிவுகள் உரிய கால அட்டவணைப்படி நடைபெறும். இதற்கமைய இக்கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்கப்பெறாத உறுப்பினர்களும் இவ் அறிவித்தலை ஏற்று கிளைப்பொதுச்சபைக்கூட்டங்களில் கலந்து கொள்ள முடியும் என்பதை அறியத்தருகின்றேன்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

### 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை


| இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் | காலம் | நேரம் | கிளைப்பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | புலோலி தெற்கு | திரு.பொன்னம்பலம் கோகுலன் | 2025.09.14 | மு.ப 10 மணி | புலோலி மெ.மி.த.க பாடசாலை |
| 02 | 02 | புலோலி மேற்கு | திரு.அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | 2025.09.14 | மு.ப 10 மணி | திருநாவலூர் சனசமூக நிலையம் |
| 03 | 11 | புலோலி கிழக்கு மத்தி | திரு.சந்திரலிங்கம் சுவர்ணன் | 2025.09.14 | மு.ப 10 மணி | புலோலி கிழக்கு மத்தி அன்னதான மண்டபம் |
| 04 | 13 | புலோலி தென் மேற்கு | திரு.வீரசிங்கம் இரத்தினகாந்தன் | 2025.09.14 | மு.ப 10 மணி | புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் முன்பள்ளி |

புலோலி பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
புலோலி.

திருமதி.த.கோகிலவாணி
செயலாளர்

(C-3856)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 14.08.2025 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் ஆறுமுகம் சின்னராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 13.09.2025 சனிக் கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனிததீர்த்தக் கரையில் கரைக்கப்படும். மறுநாள் 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் கோவிற்கடவை திருமண மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(1543)

கோவிற்சந்தை
கரவெட்டி மத்தி, கரவெட்டி

இங்ஙனம் : குடும்பத்தினர்
077 936 1356

# வவுனியா மாநகர எல்லைக்குள் புகைத்தல் பகுதிகளுக்குத் தடை

(வவுனியா)

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட உணவகங்களுடன் இணைந்தவாறாக உள்ள புகைத்தல் பகுதிகளுக்கு நேற்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய மாநகரசபையின் அமர்வின் போது குறித்த உத்தரவினை முதல்வர் சு.காண்டீபன் வழங்கியுள்ளார்.

குறிப்பாக வவுனியா நகரத்தில் உள்ள சில உணவங்களுக்கு பின்புறமாக புகைப்பிடிப்பதற்கென சிறிய பகுதிகள் காணப்படுகின்றது.

இவ்வாறான பகுதிகளை உடன் தடை செய்யுமாறு மாநகர சுகாதாரக் குழு பரிந்துரை செய்துள்ளதையடுத்து குறித்த உத்தரவை மாநகர முதல்வர் வழங்கியுள்ளார். இதனையடுத்து இவ் விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வவுனியா மாநகரசபை தீர்மானித்துள்ளது. (ம-7,250)

## விஜேராம...

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு கடந்த காலத்தில் அளவிற்கு அதிகமாக வரப்பிரசாதங்களைத் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் குறைத்து புதிய சட்டம் ஒன்றை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தது.

இப் புதிய சட்டம் நேற்று முன்தினத்திலிருந்து அமுலுக்கு வந்த நிலையில் அரச இல்லங்களை நேற்று வரை பயன்படுத்தியிருந்த மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிகா ஆகியோர் நேற்று அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அந்தவகையில் கொழும்பு, விஜேராம வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது மனைவியுடன் தங்கல்லையில் அமைந்துள்ள கால்டன் வீட்டுக்குச் சென்றார்.

இதன்போது அவரது மகிந்தவின் ஆதரவாளர்கள் மகிந்தவின் வாகனத்தை முற்றுகையிட்டு ஆரவாரம் செய்திருந்தனர்.

மகிந்த ராஜபக்ஷ, தங்காலையில் உள்ள கார்ல்டன் இல்லத்திற்கு வந்த போது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ராஜபக்ஷவையும் அவரது மனைவி ஷிரந்தியையும் ஏராளமானோர் வரவேற்றனர். பலர் கார்ல்டன் இல்லத்திற்குத் திரும்பியதில் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (ம-7)

## அதிகார...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று(நேற்று) உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறும் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்க அவரின் ஆதரவாளர்கள் அணிதிரண்டு சென்றதாகவும் ஆனால், அப்போது அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருப்பதைப் பார்த்தால் வியப்பாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். தங்களைப் போகச் சொல்லிவிட்டார்கள்.

போவதற்கு இடமில்லை என்றும் அவர் கூறியதாகவும் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

ஆனால், அவர் அதற்காக வெட்கமடைய வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் ஹேமா பிரேமதாச ஆகியோர் விரட்டியடிப்பதற்கு முன்னரே வெளியில் சென்றிருக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அவர்களின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. அவர்களுக்கான சலுகைகளே குறைக்கப்பட்டுள்ளதாகவும் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். (ம-7)

## மேலும்...

பெற்றுள்ளதாக, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று வியாழக்கிழமை (11) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இந்தக் குற்றவாளிகள் தற்போது அந்தந்த நாடுகளில் சட்ட நடவடிக்கைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அவை நிறைவடைந்தவுடன், அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான அனைத்து சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இதேவேளை, ஏற்கனவே பலர் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன், இத்தகைய கைது நடவடிக்கைகள் பாதாள உலகக் குற்றங்களை ஒழிக்க பெரும் பங்களிப்பு செய்வதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## வேலையாட்கள் தேவை

வெப் அச்சு
இயந்திர இயக்குநர்கள்

● அனுபவமுள்ளவர்கள்
● பயிலுநர்கள்

◆சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
◆யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு :
076 097 3121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக மற்றும் கலப்பு பொறிமுறைகளை நிராகரியுங்கள்!

## 69 தமிழர் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்து

(கொழும்பு)

**பொறுப்புக்கூறலுக்கான ஆக்கபூர்வமான செயன்முறையை இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துவதன் ஊடாக ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் உள்ளகப்பொறிமுறைக்கான இடைவெளியை வழங்குவதானது, அத்தகைய உள்ளகப்பொறிமுறைகளின் நீண்டகாலத்தோல்வியின் பின்னணியில் அச்சுறுத்தலானதொரு நிலையையே தோற்றுவிக்கும் என கூட்டாக எச்சரித்திருக்கும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், உள்ளக மற்றும் கலப்புப் பொறிமுறைகளை முற்றாக நிராகரிக்குமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளிடம் வேண்டுகோள்விடுத்துள்ளன.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தி தமிழ் தகவல் நடுவம், தமிழ் ஆய்வு நிலையம், இலங்கைத் தமிழ்ச்சங்கம், தமிழ் இளையோர் அமைப்பு, சர்வதேச ஈழத்தமிழர் பேரவை, கனேடியத் தமிழ்த் தேசிய அவை, உலகத் தமிழ் அமைப்புக்களின் பேரவை என்பன உள்ளடங்கலாக பிரிட்டன், அமெரிக்கா, கனடா, சுவிட்ஸர்லாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இந்தியா, மலேசியா உள்ளிட்ட உலகநாடுகள் பலவற்றிலும் இயங்கிவரும் 69 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்புநாடுகளுக்குக் கூட்டாகக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தன்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு ஏதுவான பலதரப்பட்ட வழிமுறைகள் என்பன தொடர்பில் அக்கடிதத்தில் விரிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு பொறுப்புக்கூறலுக்கான ஆக்கபூர்வமான செயன்முறையை இலங்கை அரசாங்கத்திடம் வலியுத்துவதன் ஊடாக ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் உள்ளகப்பொறிமுறைக்கான இடைவெளியை வழங்குவதானது, அத்தகைய உள்ளகப் பொறிமுறைகளின் நீண்டகாலத் தோல்வியின் பின்னணியில் அச்சுறுத்தலானதொரு நிலையையே தோற்றுவிக்கும் எனவும் அக்கடிதத்தில் கரிசனை வெளியிடப்பட்டுள்ளது.

அத்தோடு சுயாதீன சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றை தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில், இவ் வாறான நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபையின் மீதான நம்பிக்கையில் சரிவு ஏற்படுவதற்கும், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதற்கும் வழிகோலும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான உள்ளக மற்றும் கலப்புப் பொறிமுறைகளை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ள அவ்வமைப்புக்கள், உள்ளகப்பொறிமுறையை நிராகரிக்குமாறும், இனவழிப்புப் பிரகடனத்தின் கீழ் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளன. (நி)

## இலங்கை - நேபாளம் இடையிலான விமான சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

நேபாளத்தில் இடம்பெற்ற பதற்றமான சூழ்நிலை காரணமாக அந்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தால் மூடப்பட்டிருந்த நேபாள- காத்மண்டு சர்வதேச விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டதன் மூலம் இலங்கைக்கும் நேபாளத்திற்கும் இடையிலான விமானங்கள் மீண்டும் இயக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இலங்கை ஏர்லைன்ஸ் விமானம் UL-181 நேற்று காலை 8.15 மணிக்கு நேபாளத்தின் காத்மண்டுவிற்கு புறப்பட்டது.

நேபாளத்தில் நடந்து வரும் மோதல் காரணமாக நாட்டின் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைக்கும் நேபாளத்திற்கும் இடையிலான விமானங்களை நேற்று முன்தினம் இலங்கை ஏர்லைன்ஸ் நிறுத்த நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மகிந்தவை அவசரமாக சந்தித்த சீனத்தூதுவர்

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென் ஹாங் கொழும்பில் உள்ள விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்று சந்தித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதிகள் தங்கள் உத்தியோகபூர்வ இல்லங்களை அரசாங்கத்திடம் திருப்பித் தர வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி உரிமைகள் (ரத்து) சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட ஒரு நாளுக்குப் பிறகு இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 16.09.2025 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு 45 டிப்பர் மணல், 2 டிப்பர் கிரவல், 2 டிப்பர் மண், 100 தகர பரல், 400 பிளாஸ்ரிக் கான், 146 சவல்கள் மற்றும் 6 மண் வெட்டிகள் என்பன ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## பாடசாலை போக்குவரத்து வாகனங்களுக்கு புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்குப் புதிய விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக போக்குவரத்து அமைச்சுடன் இணைந்து, இந்த விசேட கூட்டுத்திட்டம் செயற்படுத்தப்படுவதாக கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக, பாடசாலை போக்குவரத்து வாகனங்களுடன் தொடர்புடைய பல விபத்துகள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகளில் மாணவர்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தநிலையில், பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கும் பாடசாலை தொடர்பான நடவடிக்கைகளுக்கும் அமைச்சு பொருத்தமான பரிந்துரைகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய, பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களும், புதிய விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்குமென கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார். (நி)

## லஞ்ச ஊழலைத் தடுக்க

## பொலிஸ் அதிகாரிகளுக்கு கமரா பொருத்தப்பட்ட சீருடைகள்



(கொழும்பு)

போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு கமரா பொருத்தப்பட்ட சீருடைகளை வழங்க உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்த கமராக்கள் மூலம் போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளால் இடம்பெறும் குற்றச் செயல்களை கண்டறிய முடியும்.

அத்துடன் போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்புகளை இந்த கமராக்கள் பதிவு செய்யும்.

இந்த கமராக்கள் மூலம் நாட்டில் இடம்பெறும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றங்களைத் தடுக்க முடியும்.

போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளை ஆதாரங்களுடன் கண்டறிய முடியும்.

நாடளாவிய ரீதியில் 608 பொலிஸ் நிலையங்கள் உள்ளன. நகர்ப்புற பகுதிகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு கமரா பொருத்தப்பட்ட சீருடைகளை முதலில் வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

இந்த கமராக்கள் பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளை கண்காணிக்க மிகவும் உதவும். பொலிஸ் அதிகாரிகளால் இடம்பெறும் குற்றச் செயல்கள், சட்டவிரோத கைது நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் கமரா பொருத்தப்பட்ட சீருடைகளை வழங்க உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரில் முதல் வெற்றியை ருசித்த ஆப்கானிஸ்தான்



ஆசிய கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 94 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் ஹொங்கொங் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பில் செதிகியுல்லா அடல் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றதுடன், அஸ்மதுல்லா ஓமர்சாய் 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் ஹொங்கொங் அணி சார்பில் ஆயுஷ் சுக்லா மற்றும் கிஞ்சித் ஷா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் 189 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணி 20 ஓவர் நிறைவில் 29 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஹொங்கொங் அணி சார்பில் பாபர் ஷயாத் 39 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தார்.பந்து வீச்சில் பசல்ஷாக் பாரூக்கி மற்றும் குல்படின் நைப் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (3)


# தேசியமட்ட தடகளத்தில் வடமாகாண வீரர்கள் சாதனை




93 ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட சேர் ஜோன் ராபெற் தடகள போட்டிகள் கொழும்பு தியகம சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 20 வயது ஆண்கள் பிரிவினருக்கான கோலூன்றிப்பாய்தல் போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேரந்த வீரன் ந. டன்ஸ்சன் 4.40 மீற்றர் வரை பாய்ந்து தங்கப் பதக்கத்தை யும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி வீரன் ச.கயானன் 4.30 மீற்றர் வரை பாய்ந்து வெள்ளிப்பதக்கத் தையும், மகாஜனக்கல்லூரியைச் சேரந்த வீரன் ச. துசாந்தன் 4.20 மீற்றர் வரை பாய்ந்து வெண்கலப் பதக்கத் தையும் தமதாக்கிக் கொண்டனர்.

அத்துடன் நேற்று முன்தினம் நடைபெற்ற 18 வயது ஆண்கள் பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யா/ ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி மாணவன் நி.நிதன்ராஜ் 3.90 மீற்றர் உயரம் வரை பாய்ந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை தன தாக்கிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3)




# உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த வருட ஆரம்பத்தில்



20 அணிகள் பங்கேற்கும் 10 ஆவது ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை நடத்த ஐ.சி.சி முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 55 போட்டிகள் இந்தியாவில் 5 நகரங்களிலும், இலங்கையில் இரு இடங்களிலும் நடைபெறும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி இலங்கையில் நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது.

உலகக்கோப்பையில் இறுதிப் போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு வேளை பாகிஸ்தான் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றால், இறுதி ஆட்டத்தை கொழும்புக்கு மாற்றவும் இந்திய கிரிக்கெட் வாரியம் ஒப்புக் கொண்டுள்ளது. (3)



இலங்கையின் 49 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக பங்குபற்றி சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்ற வீராங்கனை ச.யஸ்மிதா, அதே போட்டியில் வெண்கலம் வென்ற வீராங்கனை இ.ஷதுர்சனா மற்றும் கடினப்பந்து போட்டியில் வட மாகாண அணி சார்பில் பங்குபற்றிய வீரர் அ.அஞ்சயன் ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

# ஆசிய கோப்பைக்கான இன்றைய ஆட்டங்கள்




VS

நேரம்: இரவு 8 மணி

இடம்-டுபாய் சர்வதேச மைதானம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

## புதிய பதிவு, கல்விளான் வீதி, வட்டாரம் - 01

வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, கல்விளான் வீதியிலுள்ள ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டில் இதுவரை காலமும் பதியப்படவில்லை.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை **புத்திரர் பெரியதம்பி பெண் பொன்னம்மா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு T.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 583/20.05.1943 ஆம் இலக்க உறுதியால் **சிற்றம்பலம் கணபதிப்பிள்ளையும் பெண் மாரிமுத்துப்பிள்ளையும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**புத்திரர் பெரியதம்பி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு T.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1002/10.04.1946 ஆம் இலக்க உறுதியால் குறித்த **புத்திரர் பெரியதம்பி பெண் பொன்னம்மா** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றொரு பகுதியினை **கதிரேசன் புத்திரரும் பெண் மரகதச்செல்வியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு T.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1399/24.04.1948 ஆம் இலக்க உறுதியால் **கதிரேசன் சங்கரப்பிள்ளை** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறிந்த **கதிரேசன் புத்திரரும் பெண் மரகதச்செல்வியும்** காலஞ்செல்ல குறித்த ஆதனமானது **புத்திரர் பெரியதம்பி** ஆகியவருக்கு முதுசமாக வந்தடைந்தது.

**முத்துக்குமாரு திருச்செந்தூர்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு T.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5995/28.10.1961ஆம் இலக்க உறுதியால் குறித்த **புத்திரர் பெரியதம்பி** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனங்களை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**புத்திரர் பெரியதம்பி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு T.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7190/17.10.1964ஆம் இலக்க உறுதியால் குறித்த **முத்துக்குமாரு திருச்செந்தூர்** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனங்களை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கணபதிப்பிள்ளை சின்னையா பெண் பாக்கியம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு T.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9123/29.05.1969ஆம் இலக்க உறுதியால் குறித்த **புத்திரர் பெரியதம்பி** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனங்களை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**புத்திரர் பெரியதம்பியும் பெண் பொன்னம்மாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு T.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11109/27.05.1973ஆம் இலக்க உறுதியால் குறித்த **கணபதிப்பிள்ளை சின்னையாவும் பெண் பாக்கியமும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனங்களை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த **புத்திரர் பெரியதம்பி** காலஞ்செல்ல அவரது பங்கு குறித்த **புத்திரர் பெரியதம்பி கைம்பெண் பொன்னம்மா** ஆகியவருக்கு தாரப்பங்கும், தேடிய தேட்டமாகவும், மற்றும் **பெரிய சுவாமிநாதரும், பெரியதம்பி சண்முகநாதனும், பெரியதம்பி முருகேசம்பிள்ளையும், பெரியதம்பி குலசிங்கமும், பெரியதம்பி சிவலிங்கமும், திருநாவுக்கரசு பெண் லீலாதேவியும்** ஆகியவர்களுக்கு பிதாவழி முதுசமாகவும் வந்தடைந்தது.

**சுப்பிரமணியம் திருநாவுக்கரசு பெண் லீலாதேவி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு T.சங்கரப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11628/24.11.1974ஆம் இலக்க உறுதியால் குறித்த **புத்திரர் பெரியதம்பி கைம்பெண் பொன்னம்மாவும், பெரியதம்பி சுவாமிநாதரும், பெரியதம்பி சண்முகநாதனும், பெரியதம்பி முருகேசம்பிள்ளையும், பெரியதம்பி குலசிங்கமும், பெரியதம்பி சிவலிங்கமும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சுப்பிரமணியம் திருநாவுக்கரசும் பெண் லீலாதேவியும், பெரியதம்பி கைம்பெண் பொன்னம்மாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1882/04.07.1976ஆம் இலக்க உறுதியால் **நாகமுத்து மார்க்கண்டுவும் பெண் பூரணபாக்கியமும்** ஆகியவர்களுக்கு குறித்த ஆதனத்தினை நிபந்தனைகளுக்கமைவாக அறுதியாகக் கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

**சுப்பிரமணியம் திருநாவுக்கரசு பெண் லீலாதேவி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சொக்கலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3072/28.05.1977ஆம் இலக்க உறுதியால் குறித்த **நாகமுத்து மார்க்கண்டுவும் பெண் பூரணபாக்கியமும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சின்னப்பு கந்தையாவும் பெண் சரஸ்வதியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு அ.சொக்கலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3073/28.05.1977ஆம் இலக்க உறுதியால் குறித்த **பெரியதம்பி கைம்பெண் பொன்னம்மாவும் சுப்பிரமணியம் திருநாவுக்கரசும் பெண் லீலாதேவியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**சுப்பிரமணியம் திருநாவுக்கரசு பெண் லீலாதேவி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2668/24.06.1981 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சின்னப்பு கந்தையாவும் பெண் சரஸ்வதி** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **பெரியதம்பி கைம்பெண் பொன்னம்மாவும், சுப்பிரமணியம் திருநாவுக்கரசும் பெண் லீலாதேவியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2669/24.06.1981 ஆம் இலக்க உறுதியால் **சின்னப்பு செல்லத்துரை பெண் பாக்கியம்** ஆகியவருக்கு குறித்த ஆதனத்தினை நிபந்தனை அறுதியாகக் கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

குறித்த **சுப்பிரமணியம் திருநாவுக்கரசு பெண் லீலாதேவி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3736/06.08.1986 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சின்னப்பு செல்லத்துரை கைம்பெண் பாக்கியம்** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கந்தன் மார்க்கண்டன் மகள் இலட்சுமி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4379/07.05.1989ஆம் இலக்க உறுதியால் குறித்த **சுப்பிரமணியம் திருநாவுக்கரசும் பெண் லீலாதேவியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சண்முகம் குணராசாவும் பெண் இராசமலரும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4425/05.07.1989 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தன் மார்க்கண்டன் மகள் இலட்சுமி** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சின்னவன் அருச்சுனன் பெண் ஈஸ்வரலட்சுமி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1763/18.07.1975ஆம் இலக்க உறுதியால் குறித்த **புத்திரர் பெரியதம்பி கைம்பெண் பொன்னம்மாவும், பெரியதம்பி சுவாமிநாதரும், பெரியதம்பி சண்முகநாதனும், பெரியதம்பி முருகேசம்பிள்ளையும் பெரியதம்பி குலசிங்கமும், பெரியதம்பி சிவலிங்கமும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றொரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சண்முகம் குணராசா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6231/25.05.2010ஆம் இலக்க உறுதியால் குறித்த **சின்னவன் அருச்சுனனும் பெண் ஈஸ்வரலட்சுமியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**துரைராசா இராசகுமார்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3850/01.05.2015ஆம் இலக்க உறுதியால் **சண்முகம் குணராசாவும் பெண் இராசமலரும், சண்முகம் துரைராசா** ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனங்களையும் உள்ளடக்கிய ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**ஜெகதீஸ்வரன் குரு** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு கஜேந்தினி நாகேந்திரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 519/27.05.2024ஆம் இலக்க உறுதியால் **துரைராசா இராசகுமார் மறுநாமம் குணராசா இராசகுமார்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு
பெயர் : **"கல்விளானை"**
இறை : **தொல்புரம்**
விஸ்தீரணம் : **நில.பர.இலா 05 குளி 5.8**
எல்லைகள் : **கிழக்கு** - ஞானம்மா செல்லத்துரைக்குரிய ஆதனமும், கல்விளான் வீதியும், **வடக்கு** - உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.தவராஜா அவர்களால் 26.12.2022 ஆம் திகதியிட்டு 4055 ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 என காட்டப்பட்டுள்ள மிகுதி ஆதனம் **மேற்கு** - திருவடிநிலை H.T.M பாடசாலைக்குரிய ஆதனம் **தெற்கு** - எல்லுப்போலை வயிரமுத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும், ஞானம்மா செல்லத்துரைக்குமுரிய ஆதனமும், காந்திஜி சனசமூக நிலையமும்

குறித்த **ஜெகதீஸ்வரன் குரு** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதுவிடத்து குறித்த ஆதனமானது **ஜெகதீஸ்வரன் குரு** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்குப் பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(5391)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வேர் முகங்கள்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனின் "வேர் முகங்கள்" நூல் வெளியிடப் படவுள்ளது.

குறித்த நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவ சித்தாந்த துறையின் தலைவர் கலாநிதி செல்வ மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு விழாவில் கருத்துரைகளை ஊடகவியலாளரும் படைப்பாளியுமான செல்வி.சர்மிலா வினோதினி, சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

எங்கட புத்தகங்கள் பதிப்பகத்தின் ஊடாக வெளியிடப்படும் இந்நூலினை குறித்த பதிப்பகத்தின் பணிப்பாளர் கு.வசீகரன் வெளியீட்டு உரையை நிகழ்த்த நூலை மூத்த இலக்கிய ஆளுமை க.சட்டநாதன் வெளியிட்டு வைப்பார். (8)

## மாபெரும் நாடகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றம் நடத்தும் மாபெரும் நாடகத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் தலைவர் இரா.மதிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் "மழலைகளுடன் மகிழ்ந்திருப்போம்", "கொல்லி மலைக் குருடன்", அரிச்சந்திர மயான காண்டம்", கும்பகர்ணன் தென் மோடிக் கூத்து", "கரோக்கி இசை நிகழ்வு" போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(8)

## ஆவரங்காலில் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் வாகனம் மோதி இளைஞன் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இராணுவத்தினரின் கன்ரர் ரக வாகனம் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாய மடைந்த இளைஞனை வீதியில் சென்றவர்கள் மீட்டு . அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 250 | 200-300 | 150 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 150 | 120 | 180 |
| தக்காளி | 100 | 120 | 150 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 230 | 200 |
| கோவா | 250 | 280 | 250 | 220 | 300 |
| கரட் | 300 | 360 | 300 | 260 | 350 |
| பூசணி | 60 | 80 | 50 | 50 | 50 |
| புடோல் | 150 | 200 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 150 | 140 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 260 | 300 | 350 | 600 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 180 | 250 |
| பீற்றூட் | 150 | 100 | 200 | 100 | 140 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 280 | 300 |
| போஞ்சி | 500 | 500 | 350 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 300 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 120 | 40-120 | 150 | 80 | 80 |
| தேசிக்காய் | 800 | 500 | 600 | 400-650 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 120-200 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 400 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |


இலங்கையின் தமிழ் டிஜிட்டல் வாழ்வியல் தளமான "நாடி" வழங்கும்

நாடி தமிழச்சி Thamizhachi



• இம் மண்ணின் தமிழ் பெருமையை போற்றி அழகும் ஆற்றலும் படைத்த நம் தமிழ் மங்கையருக்கு மகுடம் சூட்டும் விழா..!

• நீங்கள் 20 முதல் 28 வயதுக்கு இடையிலும் உயர்கல்வி அல்லது பட்டப்படிப்பை தொடர்பவராகவும் இருந்தால் thamizhachi.nadi.lk வழியாக இப்பொழுதே விண்ணப்பியுங்கள்.

14 SEP யாழ்ப்பாணம் Valampuri Hotel

27 SEP கண்டி Radisson Hotel

23 SEP திருகோணமலை Hotel Green Garden

30 SEP கொழும்பு Pegasus Reef Hotel

நேரம் : காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும்.

"நம்பிக்கைக்கு மகுடம், இதயங்களின் சங்கமம்"

Title Sponsor fems Print Media Partner வலம்புரி

தொடர்புகளுக்கு : 0707 078 573


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- மல்லாகம் உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :- அருள்நேசன் பெண் சசிகலா
விண்ணப்பதாரர் பெயர் :- திரு. ச.அருள்நேசன்
முகவரி :- அரசொல்லை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 19, பத்தானை வீதியில் ஆதன இல. 53/11 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "முடத்தி ஒல்லை" என்ற ஆதனம் உரிமை கோருபவர் சொந்தக்காரர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 2024.04.27 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.சிறீஸ்கந்தராசா இந்துகா அவர்கள் முகதாவில் இலக்கம் 212 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியினால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரி யினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் ஆதன வரிப் பெயர்மாற்றம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 212ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதிகளில் ஒன்றான பிரசித்த நொத்தாரிசு பொ. சுந்தரலிங்கம் முகதாவில் 13.07.2021 ஆந் திகதிய 5998 ஆம் இலக்க அறுதி உறுதியின் ஆதன அட்டவணையில் குறித்த காணியின் விஸ்தீரணம் நில.பர. 04 ஆனால் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T.பாலசுப்பிரமணியம் 2021.05.10ஆம் திகதி 1586/2021 ஆம் இலக்கத்தில்வரைந்த படத்தில் 1 ஆம் ,2 ஆம், 3 ஆம் துண்டுகளாகச் சுட்டியுள்ளதன்படி நில.பர.5 இதில் கிழக்குப் பக்கமாக 2 ஆம், 3 ஆம் துண்டுகளான நில.பர. இரண்டு குளி ஒன்பதும் (நில.பர.02குளி09) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த ஆதனத்திற்கான உரித்து வரலாற்று ஆவணமாக 2002.11.03ஆம் திகதியில் அதே நொத்தாரிசு முகதாவில் 524 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதிப்படியும் 2002.11.13 ஆம் திகதி 530 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய சீதன உறுதிப்படியும் சொந்தமும் ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த 524, 530ஆம் இலக்க உறுதிக்கான ஆதன அட்டவணையில் குறித்த ஆதனம் நில.பர. 4 அளவுடைய ஆதனமே விண்ணப்பதாரருக்கு ஆதனத்தை விற்பனை செய்த சரவணமுத்து தியாகீசன் கைம்பெண் தவராணிக்கு அறுதியாக வந்தடைந்துள்ளது. எனினும் ஒரு பரப்பு அளவுடைய ஆதன அதிகரிப்பு தொடர்பில் குறித்த ஆட்சி உரித்தை வெளிப்படுத்துகின்ற தனியான உறுதி எதுவும் விண்ணப்பதாரரால் இவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை. எனவே காணியின் விஸ்திரண மானது இவ் ஆதனத்தின் முந்திய உறுதிகள் மற்றும் காணிப்பதிவகப் பதிவேடுகளில் குறித்த அளவிலும் விட பாரிய மாறுபாடுள்ளதாகக் காணப்படு கின்றது. மேலும் ஆவணங்களிலிருந்து காணியின் விஸ்தீரண அதிகரிப்பு தொடர்பில் கண்டறிய இயலாதுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை தற்போது அளவெட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவு J/215, வலிகாமம் வடக்கு பிரதேசசெயலர் பிரிவு "முடத்தி ஒல்லை" நிலப்பரப்பு இரண்டும் குழி ஒன்பதும் (நிலப். 02 குழி 9) வீடும், குழாய்க் கிணறும், வடகிழக்கேயிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும், குறித்த கிணற்றுக்கான வழிவாய்க்காற் பயன்பாட்டுரித்தும், இது நிலஅளவையாளர் T.பாலசுப்பிரமணியம் 2021.05.10ஆம் திகதி 1586/2021ம் இலக்கத்திற் தயாரித்த நிலஅளவைப்படத்தில் 2ம், 3ம் துண்டுகளாக விபரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எல்லைகள்
கிழக்கு :-சபாபதி முருகையாவுக்கும், முஜின்னாத்துக்கும் பெண் மதிவதனிக்கும் உரிய ஆதனங்கள்
வடக்கு :- றோட்டு
மேற்கு :- சன்முகம் அருள்நேசனுக்கும், திலீபன் பெண் லாவண்யாவுக்கும் உரிய ஆதனங்கள்
தெற்கு :- குறித்த திலீபன் பெண் லாவண்யாவுக்கும், சபாபதி முருகையாவுக்கும் உரிய ஆதனங்கள் இவ்வெல்லைக்குட்பட்டவைகளுள் இதன் வடக்கெல்லை யருகாக அதன் மேற்கெல்லை ஆதனத்துக்குரிய குறித்த கிணற்றுக்கான வழிவாய்க்காற் பயன்பாட்டுரித்துப் புறநீங்கலாக மிகுதி முழுவதும் இதற்குரிய வைகளும்

தற்போது இவ்வாதனத்தை அருள்நேசன் பெண் சசிகலா என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் அருள்நேசன் பெண் சசிகலா எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப் பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(3373)

# இரண்டாம் ஆண்டு
## நினைவஞ்சலி



அமரர். **இராசேந்திரம் நிக்சன்**

**(அதிபர் மு/கல்விளான்குளம் மகா வித்தியாலயம், அகில இலங்கை சமாதான நீதவான் JP)**

கலப் பெருவெளியில் உங்கள்
நினைவுகள் கனத்துக் கிடக்கின்றன
ஈராண்டு கடந்துவிட்டது
ஈர விழிகளுடன் காத்திருக்கின்றேன்
மீண்டு வரமாட்டீரோ என்று
என் மனம் வெதும்பித் தவிக்கின்றது.
நீங்கள் இல்லா இவ் உகை
என்னை நிலைகுலைய செய்கிறது
மீளாத்துயில் கொண்டு
என்னை ஆறாத்துயரில் ஆழ்த்தி
சென்றதேனோ
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் பூக்களால்
அர்ச்சிக்கின்றேன்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
என்றும் உம் நினைவுகளுடன்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (1538)

**தோற்றம் 1975.10.09**
**மறைவு- 2023.09.09**
**திதி-தேய்பிறை பஞ்சமி- 12.09.2025**

**தகவல் - மனைவி அபிராமி.**

# யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வது)
## கேள்வி அறிவித்தல்

1. எமது சமாசத்தின் நிதி ஒதுக்கீட்டில் கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளறவான வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது.
2. யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து கேள்விகளை கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமாண வேலைக்காக கோருகின்றது.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமாண அமைப்புக்கான **CIDA** பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட் டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் -0212223131 Email - tccsjaffunion@yahoo.com கேள்வி நடைமுறைகள் மற்றும் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலை நாட்களில் 2025.09.12 ஆம் திகதியிலிருந்து 2025.09.25 ஆம் திகதி வரை மு.ப 09.00 முதல் பி.ப 03.00 மணி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணமொன்றை பெறுகைக்குழு யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அவர்களிடம் இருந்து 2025.09.12 ஆம் திகதியிலிருந்து 2025.09.25 ஆம் திகதி வரை மு.ப 09.00 முதல் பி.ப 03.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்பட்ட கட்டணமாக ரூபா7000.00 (VAT நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து "தலைவர். பெறுகைக்குழு யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்" இல.826/12,கே.கே.எஸ் வீதி, உப்புக்கடை ஒழுங்கை தட்டாதெரு, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 02.10.2025 ஆம் திகதி 01.00 மணிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி நேரம் முடிந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | CIDA Grade | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| JDTCCS/ 2025/ 01 | Proposed Building- First Floor Slablevel to Roof Level. | C6 | 20.93 Million | 150 Days | 200,000.00 | 90 Days |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக்கூட்டம் 27.09.2025ஆம் திகதி 10.30மணிக்கு யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இடம் பெறும். கேள்வி கட்டளைகளைச் சமர்ப்பித்த கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் குறித்த நேரத்தில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்.**

(C-3851)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## ட்ரம்பின் நம்பகமான நண்பர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு



(வோஷிங்டன்)
அமெரிக்காவின் மிக உயர்ந்த பழமைவாத ஆர்வலர்கள் மற்றும் ஊடக பிரமுகர்களில் ஒருவராகவும், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நம்பகமான நண்பராகவும் இருந்த சார்லி கிர்க் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

31 வயதான கிர்க் புதன்கிழமை உட்டா பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு நிகழ்வின்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் கழுத்தில் காயமடைந்த நிலையில் உயிரிழந்தார்.

துப்பாக்கிச்சூடு நடந்து ஆறு மணி நேரத்திற்குப் பின்னரும் அதிகாரிகள் இன்னும் ஒரு சந்தேக நபரைக்கூட பகிரங்கமாக அடையாளம் காண வில்லை.

எந்த சந்தேக நபரும் காவலில் இல்லை என்று சட்ட அமுலாக்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெயர் குறிப்பிடப்படாத ஒருவர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டதாக அமெரிக்க புலன் விசாரணை கூட்டாட்சிப் பணியகம் தெரிவித்துள்ளது.

18 வயதில் அவர் நிறுவிய "Turning Point USA" அமைப்பு இப்போது நூற்றுக்கணக்கான கல்லூரிகளுக்கு விரிவடைந்துள்ளது.

இது தாராளவாத சார்பு கொண்ட அமெரிக்க கல்லூரிகளில் பழமைவாத கொள்கைகளைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டது.

கிர்க்கின் அதிர்ச்சியூட்டும் மரணத்தை அறிவித்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், "மாபெரும், மற்றும் புகழ்பெற்ற சார்லி கிர்க் இறந்துவிட்டார்.

அமெரிக்காவில் சார்லியை விட வேறு யாரும் இளைஞர்களின் இதயத்தைப் புரிந்து கொள்ளவில்லை" என்று கூறி இரங்கல் தெரிவித்தார். (நி)

## நீண்டகாலத்தின் பின்
## மன்னர் சார்லஸுடன் இளவரசர் ஹரி சந்திப்பு

(லண்டன்)
பிரித்தானிய இளவரசர் ஹரி நேற்று முன்தினம் புதன்கிழமை தனது தந்தை மூன்றாம் சார்லஸ் மன்னருடன் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மன்னரின் தனிப்பட்ட இல்லத்தில் ஒரு தனியார் தேநீர் விருந்துக்காக இருவரும் சந்தித்ததாக பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். ஹரியும் அவரது மனைவி மேகனும் 2020 ஆம் ஆண்டு அரச வாழ்க்கையை விட்டு வெளியேறி கலிபோர்னியாவுக்குச் சென்றனர்.

பின்னர் அரச குடும்பத்தைப் பற்றிய குறைகளை பகிரங்கமாக வெளியிட்டனர்.

இவ்வாறான பின்னணியில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. 40 வயதான ஹரி, பிரித்தானியாவில் கடுமையாக நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களை அங்கீகரிக்கும் ஒரு தொண்டு நிறுவனமான விருதுகளுக்காக இங்கிலாந்தில் இருக்கிறார்.

கடந்த திங்கட்கிழமை அவர் முதலில் விண்ட்சரில் உள்ள தனது பாட்டியின் கல்லறைக்குச் சென்று ராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதி அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் மலர்கள் வைத்து மரியாதை செலுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மக்ரோன் அரசிற்

# பிரான்ஸில் மக்கள்

- கட்டடங்கள், வாகனங்க...
- 250 பேர் கைது
- 80 ஆயிரம் பொலிஸ...

(பாரிஸ்) ••••••••••••••••• பிரான்ஸின் பிரதமராக செபாஸ்டின் லெகர்னுவை, பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் நியமித்ததைத் தொடர்ந்து பாரிஸ் மற்றும் பிரான்ஸின் பிற பகுதிகளில் மக்கள் வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



பிரான்ஸில் ஜனாதிபதி மக்ரோனின் "ரினைசன்ஸ்" கட்சி பெரும்பான்மை இல்லாமல் கூட்டணி தயவை நம்பி ஆட்சியில் உள்ளது.

இதனால் கடந்த ஒன்பது மாதங்களில் நான்கு பிரதமர்கள் மாறியுள்ளனர்.

இதற்கிடையே பொது விடுமுறை நாட்களை குறைத்தல், ஓய்வூதியத் தொகையை உயர்த்தாதது, மருத்துவம், கல்வி, வீட்டு வசதி, மானியங்கள் போன்ற மக்களுக்கு அரசு வழங்கும் நலத்திட்டங்களுக்கான நிதி குறைப்பு உள்ளிட்ட அம்சங்கள் அடங்கிய மசோதாவை நிறைவேற்ற அரசு தீவிரம் காட்டி வருகிறது.

அண்மையில் பட்ஜெட் குறைப்பு மசோதாவை தாக்கல் செய்ய, பிரதமராக இருந்த பிராங்காய்ஸ் பாய்ரு முயற்சித்தார்.

ஆனால் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் மசோதா நிறைவேற வில்லை.

இதையடுத்து நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த பிராங்காய்ஸ் பாய்ரு கோரினார். அதில் தோல்வியடைந்ததால் அவர் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

இதற்கிடையே கடந்த திங்களன்று புதிய பிரதமராக செபாஸ்டின் லெகர்னுவை, ஜனாதிபதி மக்ரோன் நியமித்தார்.

இவ்வாறு பிரதமர்கள் தொடந்து மாறுவதும் பட்ஜெட் குறைப்பும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

பார... பகு... மறி... னர்... மக... அடு... போ... ரி... வா... னர்... லி... பொ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற்கு எதிராக ... போராட்டம்!

## ...ளுக்குத் தீ வைப்பு

## ...ஸார் குவிப்பு



இந்நிலையில், நேற்று முன்தினம் பாரிஸ் மற்றும் பிரான்ஸின் பிற பகுதிகளில் மக்கள் வீதிகளை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியில் போராட்டக்காரர்கள் சாலைகளை மறித்து, வீடுகள், கட்டடங்கள் மற்றும் வாகனங்களுக்குத் தீ வைத்துள்ளனர்.

மேலும் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினர்.

போராட்டத்தைக் கட்டுப்படுத்த நாடு முழுதும் 80,000 பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

வன்முறையில் ஈடுபட்ட 250இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே பட்ஜெட் குறைப்புக்கு எதிராக வரும் 18ஆம் திகதி அனைத்து தொழிற்சங்கங்களும், வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. (நி)

# உலகின் மிகப்பெரும் செல்வந்தர் பட்டத்தை இழந்தார் எலான் மஸ்க்



(வோஷிங்டன்)

டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் உரிமையாளரான எலான் மஸ்க், உலகின் மிகப் பெரும் செல்வந்தர் என்ற பட்டத்தை இழந்துள்ளார்.

ஒரக்கிள் மென்பொருள் நிறுவனத்தின் இணை நிறுவனர் லாரி எலிசன், அவரை முந்தி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இது குறித்து ப்ளூம் பெர்க் பில்லியனர்கள் குறியீட்டு எண் தெரிவித்ததாவது, நேற்று முன்தினம் புதன்கிழமை காலை நிலவரப்படி எலிசனின் சொத்து மதிப்பு 393 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

இதேவேளை மஸ்க்கின் சொத்து மதிப்பு 385 பில்லியன் டொலர்களாகக் குறைந்துள்ளது.

ஒரக்கிள் பங்குகள் 40 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்ததே எலிசன் 1 ஆவது இடத்தைப் பிடிப்பதற்குக் காரணமாகும்.

இவ்வாண்டு டெஸ்லா பங்குகள் சரிவு கண்டுள்ளமையும் எலான் மஸ்கின் வீழ்ச்சிக்குக் காரணம் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இரட்டை கோபுரங்கள் மீதான தாக்குதல் நேற்றுடன் 24 ஆண்டுகள் நிறைவு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீதான பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்து நேற்றுடன் 24 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

செப்ரெம்பர் 11, 2001 அன்று, தற்கொலை குண்டுதாரிகள் அமெரிக்க பயணிகள் ஜெட் விமானங்களைக் கடத்திச் சென்று நடத்தப்பட்ட தாக்குதலில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கா மீது பறந்து கொண்டிருந்த நான்கு விமானங்கள் ஒரே நேரத்தில் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டன.

பின்னர் இரண்டு விமானங்கள் நியூயார்க்கில் உள்ள உலக வர்த்தகமையத்தின் இரட்டைக் கோபுரங்கள் மீது மோதியது.

முதல் தாக்குதல் நடந்த 17 நிமிடங்களுக்குப் பிறகு இரண்டாவது தாக்குதல் நடந்தது.

கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன, மக்கள் மேல் தளங்களில் சிக்கிக் கொண்டனர், நகரம் புகையால் மூடப்பட்டிருந்தது இரண்டு மணி நேரத்திற்குள், 110 மாடி கோபுரங்கள் இரண்டும் பெரிய தூசி மேகங்களுடன் இடிந்து விழுந்தன.

மூன்றாவது விமானம் வோஷிங்டன் டி.சி.க்கு வெளியே அமெரிக்க இராணுவத்தின் தலைமையகமான பென்டகனின் மேற்கு முகப்பை அழித்தது.

பயணிகள் எதிர்த்துப் போராடிய பிறகு, நான்காவது விமானம் விபத்துக்குள்ளானது.

பென்சில்வேனியா வில் கடத்தல்காரர்கள் வோஷிங்டனில் உள்ள கட்டடத்தைத் தாக்கத் திட்டமிட்டதாக நம்பப்படுகிறது.

மொத்தத்தில், 2,977 பேர் உயிரிழந்தனர். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதிகளில் உலர வைக்கப்பட்ட மீன்பிடி வலைகள்
# மன்னார் நகர சபையால் அகற்றம்

(மன்னார்)

மன்னார் நகரசபை எல்லைக்குள் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதிகளிலும் பொது இடங்களிலும் உலர வைக்கப்பட்ட மீன்பிடி வலைகளை மன்னார் நகரசபை ஊழியர்கள் அப்புறப்படுத்தி கையகப்படுத்தியுள்ளனர்.

முன்னதாகவே நீண்டகாலங்களாக மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சில மீனவர்கள் ஆபத்தான முறையில் பிரதான வீதிகளிலும் உள்ளக வீதிகளிலும் வலைகளை உலர விடுவதனால் துர்நாற்றம் உட்பட விபத்துக்களும் ஏற்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை நகரசபை ஊழியர்களால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

குறித்த விடயம் தொடர்பில் தொடர்சியாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய முதற்கட்டமாக ஜிம்றோன் நகர் மற்றும் எமில் நகர் பகுதிகளில் உலர விடப்பட்டிருந்த வலைகள் நகர சபையினால் அப்புறப்படுத்தப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ளது

அதே நேரம் மன்னார் நகரசபை எல்லைக்குள் உள்ள பிறபகுதிகளிலும் தொடர்ச்சியாக போக்குவரத்துக்கும் மக்களின் நடமாட்டத்துக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் வலைகள் உலர விடும் மீனவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதுடன் வலைகளும் கையகப் படுத்தப்படவுள்ளன. (8-285)

# ஒரு தொகுதி மாட்டிறைச்சியுடன் மூன்று பேர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட ஒருதொகுதி மாட்டிறைச்சியுடன் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் சட்டவிரோதமாக மாடு ஒன்று வெட்டப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் மற்றும் வள்ளிபுனம் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் விசுவமடு பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட இறைச்சிகளை கைப்பற்றியதுடன் மூவரை கைது செய்தனர்.

குறித்த மாடு களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-299)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1990- இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி-பா- 32 1/2<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc, Master, Assistant Director<br>எதிர்பார்ப்பு: அரச தொழில், பட்டதாரி<br>தொ.இ: B/16017 | பிறப்பு-1983-RC<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:Management, Teacher(pvt)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16026 |
| பிறப்பு:1989-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி-பா- 30<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-A/L, Electrician<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16019 | பிறப்பு-2004-இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 38<br>12இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L,கனடா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா)<br>தொ.இ: G/16029 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>2இல் செவ்<br>கி-பா-25<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:Technician<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16020 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:34 3/4<br>7இல் செவ்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்<br>தொ.இ: G/16031 |
| பிறப்பு: 1992- RC<br>நட்சத்திரம்: சுவாதி<br>8இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L, Technician (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16021 | பிறப்பு-1996 -இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:. Bsc,QA Engineer<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம், சைவபோசனம்<br>தொ.இ: G/16040 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி-பா-51<br>12இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: Bsc, Senior Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16022 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>8இல் செவ்<br>கி.பா: 19<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:Diploma, விளையாட்டு பயிற்றுவிப்பாளர் (Gov)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16042 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 441



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஈகை குணம்!

ஒரு ராஜாவைத் தேடி வந்தார் ஒருவர். "வாங்க என்ன விடயம்?" என்றார் ராஜா.

"எனக்கு ரொம்பப் பசிக்கிறது?" என்றார் வந்தவர்."

"அதனாலே என்ன. இங்கே எல்லா வகையான உணவும் இருக்கிறது. உங்களுக்கு எந்த வகையான உணவு வேண்டும்?" என்றார் ராஜா.

"எனக்கு மாமிச உணவு சாப்பிட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. அதனாலே அதுமாதிரி உணவு கிடைத்தால் சரி!" என்றார்.

"அது மாதிரி உணவே கிடைக்கும்படியாக செய்கிறேன். தங்களுக்கு எந்த மிருகத்தின் மாமிசம் வேண்டும்?" என்று கேட்டார்.

"எனக்கு இன்றைக்கு நரமாமிசம் சாப்பிட வேண்டும் போல ஆசையாக இருக்கிறது. அதனாலே இன்றைக்கு மனித மாமிசம் கிடைத்தால் பரவாயில்லை!" என்றார்.

அந்த ராஜா இதைக் கேட்டதும் கொஞ்சம்கூட யோசிக்கவே இல்லை.

"அப்படியே செய்கிறேன். கொஞ்சம் இப்படி உட்காருங்கள்!" என்று சொல்லிவிட்டு அரண்மனைக்கு உள்ளே போனார் ராஜா. அங்கே அந்த ராஜாவுடைய பிள்ளை உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்த்து "மகனே. வந்திருக்கிறவர் நரமாமிசம் கேட்கிறார்!" என்றார். அவ்வளவுதான். அந்தப் பிள்ளை என்ன செய்தான் தெரியுமா? கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. தயங்கவில்லை.

"அதனாலே என்னப்பா..! என்னையே வெட்டி அவருக்குக் கொடுத்துவிடுங்கள்!" என்று விட்டான்.

உடனே அந்த ராஜா அதே மாதிரி செய்து ஒரு தங்கத்தட்டிலே வைத்து அதைக் கொண்டு போய் உட்கார்ந்திருந்தவர் முன்னால் வைத்தார். உடனே என்ன நடந்தது தெரியுமா? வந்திருந்தவர் ஆண்டவனாக மாறினார்.

ஆசிர்வாதம் செய்தார். மகனையும் உயிர்பிழைக்க வைத்து விட்டார். அப்படி செய்து விட்டு ஆண்டவன் போய்விட்டார். அதற்குப் பிறகு அமைச்சர்கள் எல்லாம் ராஜாவிடம் வந்தார்கள்.

"அரசே... இப்படி தானம் செய்கிறீர்களே! யார் எதைக் கேட்டாலும் கொடுத்து விடுகிறீர்களே! எதற்காக இப்படி செய்கிறீர்கள்! என்ன பலன் கருதி இப்படி தானம் செய்கிறீர்கள்?

எந்தப் புண்ணிய உலகத்தை அடைவதற்காக இப்படி செய்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த ராஜா சொன்னார்.

"நான் எந்தப் பலனைக் கருதியும் தானம் செய்யவில்லை. தானம் செய்வது என்னுடைய சுபாவம். தானம் கொடுத்தால் தான் எனக்கு மகிழ்ச்சியும் மனநிம்மதியும் ஏற்படும்! எப்படி பொருள் மேலே ஆசையுள்ளவர்கள் அது கிடைக்கவில்லை என்றால் மன நிம்மதி இழக்கிறார்களோ அதுமாதிரி தானம் கொடுக்கவில்லை என்றால் நான் மனநிம்மதியை இழந்துவிடுவேன். இது என்னுடைய கெட்டகுணம் என்று வைத்துக்கொண்டாலும் சரி!" என்றார்.

(நிஷ்காம்ய யோகம் - என்கின்ற ஹிந்தி நூலில் இந்தக் கதை வருகிறது!) இந்தக் கதையைக் கேட்டதும் நமக்கு என்ன தோன்றும். இது நடைமுறை சாத்தியமான விடயமா என்கின்ற சந்தேகம்தான் வரும்.

வருகிறவன் சாப்பாடு கேட்டான் என்பதற்காக மகனையே வெட்டிக் கொடுப்பது. வேடிக்கையாக இருக்கும் இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் செய்தால் எல்லாரையும் "புக்" செய்து உள்ளே தள்ளி விடுவார்கள் இருந்தாலும் இதிலே விடயம் அது இல்லை!

எதையும் எதிர்பாராமல் செயகின்ற ஈகைக்குணம் இருக்கே பாருங்கள். அப்படி ஒரு சிறந்த மனப்பான்மை எப்படிப்பட்டது என்பதை நமக்கு புரிய வைப்பதற்காகத்தான் இந்தக் கதை.

நிஷ்காம்ய யோகம் என்று சொல்கிறார்களே இதுதான் அதாவது பிரதிபலனைக்கருதாது காரியம் செய்தல்!

அது சரி - இந்தக் கதையிலே வந்த ராஜா யார் தெரியுமா? அவர்தான் சிபிச்சக்கரவர்த்தி! புறாவை காப்பாற்றுவதற்காக தன்னையே வேடனுக்குக் கொடுத்தாரே. அந்தச் சிபிச்சக்கரவர்த்திதான்!

அப்படிப்பட்ட இந்தக் காலத்திலேயெல்லாம் "நிஷ்காம்யயோக" மனப்பான்மையோடு யார் இருக்கிறார்கள்?

இந்தக் காலத்திலே ராஜாக்கள் இருந்தால் எப்படி நடக்கும் தெரியுமா? இப்படித்தான் நடக்கும். ஒரு ராஜா இன்னொரு நாட்டுக்கு சமாதானப் புறாவை தூது அனுப்பினார். அப்படி அனுப்பிய அடுத்த வாரமே அந்த நாட்டோடு சண்டை போடுவதற்கு படைவீரர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

"என்ன இது. சமாதானப் புறாவையும் தூது அனுப்பிவிட்டு சண்டை போடுவதற்கும் கிளம்பிவிட்டீர்களே!" என்று கேட்டார்கள். "அட நீங்கள் வேற. சமாதானத்திற்காக அனுப்பிய புறாவையும் அந்த ஆள் சமைத்து சாப்பிட்டுவிட்டான். அதற்காகத்தான் இந்தப் போர்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

க.தாரிகா - 155, ச.அபிஷன்- 136, டா.பிரவீன் - 135

# மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கல்

சாவகச்சேரி-சக்தியம்மன் பாடசாலையில் கல்விகற்கும் தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு அண்மையில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி-கோவிற் குடியிருப்பு கிராம அபிவிருத்திச்சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.(8-30)


# மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 104 ஆவது ஆண்டு நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 104 ஆவது நினைவு தினம் நேற்று வவுனியா குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலையடியில் இடம் பெற்றிருந்தது.

இதன்போது அவரது திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன், திருமதி கிருஷ்ணராஜ் லிசாந்தினியால் கவி அஞ்சலியும், ஆசிரியர் கதிர் வண்ணனால் நினைவுரைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வவுனியா மாநகரசபை மேயர் சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகரசபை பிரதி மேயர், மாநகரசபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-250)



# அன்பு

அன்பு என்னும் சொல் மூன்று எழுத்தால் ஆன தமிழ்ச்சொல். அச் சொல் உணர்த்தும் பொருளோ மிகவும் ஆழமானது. அன்பு என்ற சொல்லின் பொருள் என்ன? எல்லா உயிர்களிடத்திலும் நாம் அன்பாக இருக்க வேண்டும். ஒருவர் மீது எப்படி அன்பு செலுத்தலாம் அதைற்கு ஓர் அடையாளம் உண்டு. ஒருவரை நாம் நேரில் காணும் போது ஓர் ஆர்வம் ஏற்படுகிறது.

அவருடைய தோற்றம் அல்லது நடை அல்லது பேச்சு அல்லது செயற்பாடு எம்மைக் கவர்கிறது. அது அவர் மீது ஓர் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. அந்த ஆர்வமே அவரோடு நட்புக் கொள்ள வைக்கிறது.

இத் தொடர்பை வள்ளுவர் வருமாறு மிக அழகாக விளக்கிப் பதிவு செய்துள்ளார்.

" அன்பு ஈனும் ஆர்வம் உடமை அது ஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு"

(குறள்-74)

இங்கு வள்ளுவர் அன்பு ஒரு தாயாக இருப்பதை நுட்பமாக உணர்த்தியுள்ளார். அந்தத் தாய் ' ஆர்வம்' என்னும் பெண் குழந்தையை ஈன்றெடுக்கின்றாள். அந்தப் பெண் குழந்தை ' நண்பு' என்னும் குழந்தையை ஈன்றெடுக்கின்றாள். இது ஒரு தலைமுறை தொடர்பாக அமைகிறது.

விட்டுவிலக முடியாத இறுக்கமான நட்புக்கு அன்பு தான் அடிப்படையாக அமைந்துள்ளது.

அன்பு ஒருவருடைய உடம்பிலே உயிர் நிலையாக விளங்குகிறது. அன்புள்ளவரே உயிர் உடையவராவார். அன்பில்லாதவர்களிடம் எலும்பைத் தோலால் போர்த்த உடம்பு மட்டுமே இருக்கும். அன்பு இல்லாதவருடைய செயற்பாடுகள் யாவும் இரக்கம் அற்றவையாக அமையும்.

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் மனப்பாங்கு இவர்களிடம் இருக்காது. மனிதர்களோடு மட்டுமே நட்பாக இருக்க முடியும் என்று எண்ணுபவர் பலர்.

ஆனால் பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்த முடியும் உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் இருப்பதும் அன்பின் வெளிப்பாடேயாம்.

அன்பு என்பதை நாம் மறைக்க முடியாது. அதனை ஒருவரும் அறியக் கூடாது என அடைத்து வைக்கவும் முடியாது அது தன்னைத்தானே வெளிப்படுத்திவிடும்.

அன்புடையாரை நேரிலே காணும் போது கண்களில் துளிர்க்கும் நீர் உண்மையை வெளிப்படுத்தும்.

அன்பை எதிர்பார்ப்பவர் பலர் உள்ளர். சிறுவரும் முதியோரும் தம்மிடம் எல்லோரும் எப்போதும் அன்பாக இருக்க வேண்டும் என எதிர்பார்த்து இருப்பவர்கள். அவர்களைப் புறக்கணித்தால் மனம் நொந்து உடல் நலத்தை இழந்து விடுவர்.

அன்பு இருக்கும் இடத்தில் ஒளி வீசிக்கொண்டிருக்கும். அதனால் அன்பை 'உலகமகா ஜோதி' எனப் போற்றுகின்றனர். அன்பினால் எல்லோரையும் ஈர்க்கலாம். இணைக்கலாம். அன்புள்ளவரிடத்தில் தன்னலம் பேணும் பண்பு இருக்காது. அன்புள்ளவர் பிறர் நலத்திலேயே கண்ணாக இருப்பார்கள். பிறருக்காக எதையும் செய்ய தயங்க மாட்டார்கள். உடலுறுப்புக்களை அன்பு ஒழுங்காக இயங்க வைக்கும்.

அறம் செய்வதற்கும் அன்பு துணையாக இருக்கும். மறம் செய்யாமல் தடுக்கும் வலிமையும் அன்புக்கு உண்டு. அன்பை வெளிப்படுத்த பல்வேறு செயறபாடுகள் உள்ளன. இனிமையாகப் பேசுவதன் மூலம் நாம் எமது அன்பை ஒருவரிடம் காட்டலாம். இன்னும் விருந்தோம்பல் செய்வதாலும் அன்பை வெளிப்படுத்தலாம். 'விருந்து' என்ற சொல்லின் பொருள் 'புதுமை' என்பதாகும். எனவே விருந்தினர் என்பது எமது இல்லத்திற்கு வருகை தருகின்ற புதியவரையே குறிக் கும். அவ்வாறு வருகின்ற விருந்தினரிடம் அன்பாகப் பேசி அவருக்கு உணவளிக்க வேண்டும். அவர் மனம் கோணாமல் நடக்க வேண்டும்.

குழந்தையிடம் அன்பு பாராட்டுவது என்பது மிகவும் தேவையான ஒரு செயற்பாடு. அதிலும் ஆதரவற்ற குழந்தைகளிடம் அன்பு செலுத்துவது தாய்மை குணமாகும்.

பெற்றோரையும் உற்றாரையும் இழந்து தனித்து போன குழந்தையின் துன்பம் மிகப் பெரியது. இனிமேல் யார் என்னை அன்போடு வளர்ப்பார் என ஏங்கும் குழந்தையை அன்பு பாராட்டி அணைத்து வளர்க்கும் பக்குவத்தைப் பெற்றவரே அன்புடையவராவார். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என எம் முன்னோர் கூறிச் சென்றுள்ளனர்.

எனவே எம்மிடம் இருக்கும் அன்பு எனும் உணர்வை வெளிப்படுத்தித் தாய் போன்ற பரிவோடு குழந்தையிடம் அன்பு செலுத்த வேண்டும். அன்னை திரேசா இத்தகைய ஒரு அன்பான வாழ்வியலையே மேற்கொண்டார்.

அன்பு பிறருடைய துன்பத்தை எமக்கு ஏற்பட்ட துன்பமாகக் கருதிச் செயற்பட வைக்கும். அன்பு கடத்தப்பட வேண்டிய ஒரு புரிந்துணர்வு வையகத்தாரை ஒன்றாய் இணைக்க வல்லது.

வெள்ளி நற்சிந்தனை 04



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

12.09.2025
ஆவணி 27 , வெள்ளிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 2.03 மணி வரை
பரணி பிற்பகல் 4.36 மணிவரை

சுப நேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
கார்த்திகை விரதம்,மஹாபரணி

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை.

வளவன்

**மேஷம்** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**கடகம்** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**துலாம்** உறவினர் நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**மகரம்** விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல போசனைகளைக் கூறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**ரிஷபம்** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் எதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** நேற்று பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழி பாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எதற்காகவும் வீண்பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**தனுசு** புத்திசாதுரியமாக நடந்து பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மீனம்** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

தான் செய்வது என்ன என்பதை உணர்ந்து செய்பவனுக்கு உலகம் வழிவிட்டு நிற்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 864





இவளாகவேதான் இவளுடைய அத்தையைத் தேடிக் கொண்டு வந்தாள்.

யார் இவளுடைய அத்தை? ஓகோ! சேந்தன் அமுதனின் அன்னையா? கோட்டைக்கு வெளியில் அல்லவா அவர்களுடைய வீடு இருக்கிறது?

இல்லை அமுதனின் அன்னை இல்லை. இவளுக்கு இன்னொரு ஊமை அத்தை இருக்கிறாள். இளவரசி! தங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டிய செய்திதான். ஈழநாட்டுக் காடுகளில் பித்துப் பிடித்தவள் போல் திரிந்து கொண்டிருந்த ஊமை ஸ்திரீ ஒருவர் உண்டு. அந்த மாதரசியை இங்கே ஒரு முக்கியமான காரியத்துக்காக அழைத்து வர விரும்பினேன். அதற்காகப் பெரு முயற்சி செய்தேன் கடைசியில், வெற்றி கிட்டியது அந்தச் சமயத்தில்"

குந்தவை தேவி சொல்லி முடியாத பரபரப்பை அடைந்து, "உண்மையாகவா? அந்தப் பெண்மணி இப்போது இங்கே இருக்கிறாளா? நான் உடனே பார்க்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே பீடத்தை விட்டு எழுந்தாள்.

"மன்னிக்க வேண்டும் தேவி! வெற்றி கிட்டும் சமயத்தில் இந்தப் பெண் குறுகிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டாள்!" என்றார் முதன்மந்திரி.

குந்தவை மிக்க ஏமாற்றத்துடன் திரும்பவும் உட்கார்ந்து "பூங்குழலி! இது உண்மைதானா? என்ன காரியம் செய்து விட்டாய்!" என்றாள்.

"தேவி! என் அத்தையை அழைத்து வருவதற்கு முதன் மந்திரி கையாண்ட முறையைக் கேளுங்கள். அப்போது என் பேரில் குற்றம் சொல்லமாட்டீர்கள்!" என்றாள் பூங்குழலி.

பிறகு, முதன்மந்திரி நடந்தவற்றைச் சுருக்கமாகக் கூறினார்.

கேட்டுக் கொண்டிருந்த இளையபிராட்டி, அப்படியானால் இந்தக் கோட்டைக்குப் பக்கத்திலே தானே எங்கேனும் இருக்க வேணும்? தேடிப் பார்க்கலாமே?" என்றாள்.

"நல்ல வேளையாகத் தேடிப் பார்க்க வேண்டிய அவசியம் கூட இல்லை. சேந்தன் அமுதன் குடிசையில் இன்று காலையில் பார்த்ததாக என் சீடன் சொல்லுகிறான்" என்றார் முதன்மந்திரி.

"அப்படியானால் ஏன் வீண் கால தாமதம்? மற்றக் காரியங்கள் எல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். நாமே போய் அழைத்து வருவோம் தாங்கள் வருவதற்கில்லாவிட்டால் நான் போய் வருகிறேன் வானதி! புறப்படு, போகலாம்!" என்றாள்.

ஆழ்வார்க்கடியான் அப்போது குறுக்கிட்டு, "தேவி! சற்று யோசித்துச் செய்ய வேண்டும். புதிய மனிதர்கள் கூட்டமாய் வருவதைக் கண்டால் அந்த அம்மாள் மிரண்டு ஓடத் தொடங்கி விடலாம். பிறகு புயலைப் பிடித்தாலும் அந்த அம்மணியைப் பிடிக்க முடியாது!" என்று சொன்னான்.

"ஆம், திருமலை சொல்லுவது சரிதான் நம்மைப் பார்த்ததும் பூங்குழலியின் அத்தை மிரண்டு ஓடத் தொடங்கி விடலாம். நமது பிரயத்தனமெல்லாம் வீணாகிவிடும்! நீ என்ன யோசனை சொல்கிறாய், திருமலை?" என்று முதன் மந்திரி கேட்டார்.

(தொடரும்...)

# நவீன முறைகளை ஏற்கும் மனநிலை விவசாயிகளிடம் ஏற்பட வேண்டும்

## கிளி.மாவட்ட அரச அதிபர் முரளிதரன்



(கிளிநொச்சி)

**விவசாயத் துறையில் மாற்றம் ஏற்பட வேண்டுமெனில் விவசாயிகளின் மனப்பான்மையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதாவது பாரம்பரிய முறைகளைத் தாண்டி தொழில் நுட்பம் மற்றும் நவீன நடை முறைகளை ஏற்றுக்கொள்கின்ற மனநிலை மாற்றம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியம் - 2025 கீழ் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளீடு வழுங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பாரம்பரிய விவசாய நடை முறைகளுக்கு அப்பாற்பட்டு நவீன நடைமுறைகளுக்கு மாற வேண்டியது காலத்தின் தேவையாகும். ஏனெனில் எதிர்காலங்களில் நிலம்,நீர் வரையறுக்கப்பட்டுள்ளன.

எனவே நவீன விவசாய முறையில் இவற்றை சிக்கனமாக பயன்படுத்த முடியும். சிறிய நிலப்பகுதியில் குறைந்தளவு செலவு மற்றும் உள்ளீடுகளை பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெற முடியும். இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களை பொருளாதார ரீதியாகவும், சமூகரீதியாகவும் வலுப்படுத்தும்.

தற்போது அதிகளவான இரசாயன பசளை மற்றும் பூச்சி நாசினிகளின் பயன்பாட்டினால் அதிகளவான நோய்கள் ஏற்படுகின்றன. இதற்கு கண்டாவளை பிரதேச செயலர் பிரிவினை சுட்டிக்காட்ட முடியும். ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளை விட இங்கு கிட்னி நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதாக புள்ளிவிவர தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனெனில் வெள்ள அனர்த்த காலங்களில் அதிகளவான நீர் தேங்கி நிற்கும் இடமாக குறித்த பிரதேசம் காணப்படுகின்றது. ஏனைய இடங்களில் இருந்து வரும் நீருடன் இரசாயன பசளை மற்றும் பூச்சி நாசினிகளும் கலந்து இங்கு நீண்ட காலங்கள் தேங்குவதால் அவை நிலத்தில் ஊறி காலப்போக்கில் இவ்வாறான பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

இதனை உணர்ந்து விவசாய தொழில்நுட்ப முன்னேற்றத்தை பயன்படுத்தி முன்னேற வேண்டும். விவசாயிகளின் மற்றும் மக்களின் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். இதனூடாகவே உடலின் பாதுகாப்பை அதிகரிக்க முடியும். மேட்டு நிலங்கள் மற்றும் வீட்டுத்தோட்டங்களில் கூட இதனை மேற்கொள்ள அனைவரும் முன்வர வேண்டும் என தெரிவித்தார். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இல்லா விட்டாலும் நாளை உங்கள் கடமையை நீங்கள் செய்தே தீர வேண்டும் அதில் இருந்து தப்பிக்க முடியாது. - ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாட மாளிகையும் சட்டம் வரும் மட்டே

ஆகுங்காலத்தே அவை அவை ஆகும். போகும் காலத்தே பொன் பொருள் புகழ் எல்லாம் போகும் என்பார் கவியரசு கண்ணதாசன்.

எங்கள் பட்டினத்தடிகள் மானிட வாழ்வு எத்தன்மையதென்பதை மிகத் தெளிவாகச் சுட்டி நிற்கிறார்.

**மாடுண்டு கன்றுண்டு மக்கள் உண்டென்று மகிழ்வதெல்லாம் கேடுண்டு எனும்படி கேட்டு விட்டோம் இனிக் கேண் மனமே;** கடவுள் ஒருவன் தான் நமக்குத் துணை.

இதை அறிந்து கொள் என மானிட சமூகத்துக்கு நிலையாமையின் தத்துவத்தை பட்டினத்தார் மிகத் தெளிவாகச் சொல்லி வைக்கிறார்.

இவ்வாறு கூறிய பட்டினத்தார் **காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே** என தான் கூற வந்த உண்மைக்கு விளக்கம் தருகிறார்.

அதனாலன்றோ **செத்தாரைப் போல் திரி...** என்பார் அவர்.

இங்குதான் பட்டினத்தடிகள் மிக உயர்ந்த தத்துவஞானத்தை நமக்குக் கூறி வைக்கிறார்.

ஆம், இந்தப் பூமியில் உனக்குக் கிடைத்த வற்றில் பற்று வைக்காதே. நீ எங்ஙனம் தனியாக வந்தாயோ அங்ஙனமே நீ தனியாகப் போய்விடுவாய். உனக்கு இப்பூமியின் கண் கிடைத்தவை இப்பூமியிலேயே விடப்பட வேண்டும். ஆகையால் எதிலும் பற்று வைக்காதே.

அவ்வாறு பற்று வைக்காத நிலை இறந்தவர்களின் நிலைக்குச் சமமானது.

தவிர, இறந்தவர்கள் இறை உலகை அடைந்தவர்கள் என்றே பொருள் கொள்ளப்படுகின்றனர்.

ஆக, இறை உலகில் இருக்கக்கூடியவர்கள் எத்துணை மேன்மை கொண்டவர்கள். அவர்களிடம் பற்றுக் கிடையாது. மாறாக அவர்கள் அன்புமயமானவர்கள்.

ஆக, இறைவடிவமாக உள்ள அன்பை மற்றவர்களிடம் காட்டும்போது எங்கும் இன்பமே சூழும். இதையே பட்டினத்தடிகள் செப்பி நிற்கிறார்.

ஆம், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மாட மாளிகை, சேவகம் செய்வதற்கான பணியாளர்கள், பாதுகாப்புப் பிரிவினர் இன்னும் ஏகப்பட்ட வசதிகள் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் அநுர அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட சட்டத்தின் பிரகாரம் மேற்குறித்த அத்தனை சலுகைகளும் நீக்கப்பட்டு, உயரிய மாளிகையில் இருந்து நேற்று 11ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதிகள் வெளியேறியுள்ளனர்.

ஏழை மக்கள் ஒரு நேர உணவுக்கு அல்லாடும்போது, நீங்கள் மட்டும் மக்களின் வரிப் பணத்தில் சொகுசாக இருப்பது எந்தவகையில் நியாயம்.

உண்மையில் நீங்களாகவே மாளிகைகளில் இருந்து வெளியேறியிருக்க வேண்டும். என்ன செய்வது சட்டம் கொண்டு வந்து உங்களை வெளியேற்ற வேண்டியுள்ளது எனில், **மாட மாளிகையும் சட்டம் வரும் மட்டே** என்று இனியேனும் உணருமினே!

# நீண்ட தூரம் பயணிக்கும் பேருந்துகள், வான்களுக்கு

## விரைவில் புதிய விதிமுறைகள்

நீண்ட தூர பயணங்களில் மக்களை ஏற்றிச் செல்லும் பேருந்துகள் மற்றும் வான்களுக்கு விரைவில் புதிய விதிமுறைகள் அமுல்படுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு உரையாற்றிய அமைச்சர்,

இந்த ஒழுங்குமுறை 06 முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டது என்றும் தெரிவித்துள்ளார்.

அதன்படி 100 கி.மீ.க்கு மேல் பயணிக்கும் பேருந்துகள், வான்கள் எல்லை தாண்டிய பயணங்கள் மேற்கொள்வதற்கு முன் வாகன ஆய்வுச் சான்றிதழைப் பெறுவது கட்டாயமாக்கப்படும்.

இதன்போது டயர்கள், கண்ணாடிகள் மற்றும்பிரேக்குகளின் நிலை போன்றவை ஆய்வு செய்யப்படும்.

மாகாணங்களைக் கடக்கும் அனைத்து பேருந்துகள் மற்றும் வான்களும் பயணத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் இந்த ஆய்வை நடத்தி தேவையான சான்றிதழைப் பெற வேண்டும்.

இதுவே புதிய சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற வாகனங்களில் சுற்றுலாக்களில் ஈடுபடும் பொதுமக்கள், பயணத்திற்கு முன்னர் வாகனம் தேவையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

பொதுப் போக்குவரத்தில் பாதுகாப்பைத் தேவையான விதிமுறைகள் மூலம் மட்டுமே உறுதி செய்ய முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

# பாதாளக் கும்பலுக்கு தோட்டாக்கள் விற்பனை

## இராணுவ அதிகாரி கைது

ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள உலகக் குழு உறுப்பினரான கமாண்டோ சலிந்துவுக்கு T-56 துப்பாக்கிகளுக்கான தோட்டாக்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் இராணுவ அதிகாரி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கைது நடவடிக்கையை மேல்மாகாண வடக்குக் குற்ற விசாரணைப் பிரிவு முன்னெடுத்துள்ளது. கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரி, கைது செய்யப்படும் தருணத்தில் முல்லைத்தீவு மல்லாவி பகுதியில் உள்ள இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணைகளின் போது குறித்த அதிகாரி கணேமுல்ல கமாண்டோ படைப்பிரிவில் பணியாற்றிய காலத்தில் T-56 துப்பாக்கிகளுக்கான 260 தோட்டாக்களை இரண்டு முறை மொத்தம் ரூ.6.5 இலட்சத்திற்கு கமாண்டோ சலிந்துவுக்கு விற்றுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய மேலும் இரண்டு குற்றச்சாட்டுகளும் அந்த அதிகாரிக்கு எதிராக உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அவர், மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7)

# பாதாளக்குழுவுடன் தொடர்பு பொலிஸ் அதிகாரி கைது

ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள உலகக்குழு உறுப்பினரான கெஹெல்பத்தர பத்மேவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி காவல் கண்காணிப்பாளர் எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி கம்பஹா பிரிவுக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்டவர் ஆவார்.

அண்மையில் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட கெஹெல்பத்தர பத்மே உட்பட குற்றக் கும்பலின் ஐந்து உறுப்பினர்களை குற்றப் புலனாய்வுத் துறை தற்போது தடுத்து வைத்து விசாரித்து வருகிறது.

விசாரணைகளின் போது தெரியவந்த தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# குருக்கள்மடம் மனிதப் புதைகுழி பார்வையிட்டார் நீதிபதி

மட்டக்களப்பு - குருக்கள்மடத்தில் மனிதப் புதைகுழி அமைந்துள்ள இடத்தை களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி, உள்ளிட்ட உயர் அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை (11) நேரில் சென்று பார்வையிட்டனர்.

1990ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணித்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது உரிய நபர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தை, நேற்று நீதிபதி ஜே.பீ.ஏ.ரஞ்சித் குமார் முன்னிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர், சட்டத்தரணிகள், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர், பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக அதிகாரிகள், சட்ட வைத்திய நிபுணர்கள், தடயவியல் பொலிஸார், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பலரும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் உரிய இடத்திற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கருங்குளவிக் கொட்டுக்கு இலக்கான பெண் மரணம்

கருங்குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வித்தகபுரம், தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்வநாயகம் பாலசரஸ்வதி (வயது- 82) என்பவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த செவ்வாய்கிழமை (09) பிற்பகல் 3.30 மணியளவில் மரத்தால் விழுந்திருந்த தென்னோலையில் பாரிய குளவிக் கூடு ஒன்று காணப்பட்டதை அவதானித்த மூதாட்டி தடி ஒன்றினால் கூட்டைத் தட்டிய போது அதில் இருந்து கலைந்த குளவிகள் கொட்டியதில் பாதிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் சிகிச்சை பலனின்றி இரவு 10.00 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளைத் தெல்லிப்பழைப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரழிவுகளும் நில நடுக்கமும் குறித்த ஒரு பார்வை

03

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

குறிப்பாக, ஜப்பானின் டோகரா தீவுகளில் அண்மையில் 900 இற்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. ரஷ்யாவின் கம்சட்கா பகுதியில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால், குரில் தீவுகளிலும் ஜப்பானின் ஹொக்கைடோ கடலோரப் பகுதிகளிலும் சுனாமி அலைகள் தாக்கியுள்ளன.

நிலநடுக்கம் (அல்லது பூகம்பம், அல்லது பூமியதிர்ச்சி, ஆங்கிலம் :earthquake) என்பது பூமிக்கடியில் அழுத்தம் அதிகமாகி அதனால் சக்தி வெளியேற்றப்பட்டு, தளத்தட்டுகள் (Plates) நகர்வதனால் இடம் பெறும் அதிர்வைக் குறிக்கும். இந்த அதிர்வு நிலநடுக்கமானியினால் (seismometer) ரிக்டர் அளவை மூலம் அளக்கப்படுகிறது. 3 ரிக்டருக்கும் குறைவான நிலநடுக்கங்களை உணர்வது கடினமாகும். அதே வேளை 7 ரிக்டருக்கும் கூடுதலான அதிர்வுகள் பலத்த சேதத்தை ஏற்படுத்த வல்லன.

பூமியின் மேற்பரப்பு (Lithosphere) பெரும் பாளங்களாக அமைந்துள்ளது. இது எல்லா இடங்களிலும் சரியாக இருப்பதில்லை, அவை ஒவ்வொரு இடங்களிலும் மாறுபாட்டான நிலைகளைக் கொண்டு இருக்கிறது. உறுதியில்லாததாகவும், வலுவற்றதாகவும், இடைவெளி கொண்டதாகவும், விரிசல் கொண்டதாகவும் காணப்படுகிறது. இப்படி உறுதி இல்லாத இடத்தில் விரிசல் பகுதியில் நகர்வுகள் ஏற்படுகின்றன.

அதாவது இவை நகரும் நிலத்தட்டுகளாக இருக்கின்றன. நிலப்பரப்பிலும், நீரின் அடியிலுமாக உள்ள இவற்றில் ஏழு நிலத்தட்டுகள் மிகப் பெரியதாகவும், குறைந்தது பன்னிரண்டு சிறிய நிலத்தட்டுகளும் உள்ளன. இந்த ஏழு பெரும் நிலத்தட்டுகளில் ஐந்து கண்டங்களும் பசுபிக் முதலிய பெருங்கடல் பகுதிகளும் அடக்கம்.

இந்த நிலத்தட்டு கள் சுமார் 80 கி.மீ. வரை தடிமன் கொண் டதாக இருக்கிறது. இதனடியில் பாறைகள் கொதிக்கும் குழம்பாக இருப்பதாலும், பூமியின் சுழற்சி வேகத்தில் இந்தப் பாறைக் குழம்பு நகர்வதாலும், மேலே இருக்கும் நிலத்தட்டுகள் ஒன்றுடன் ஒன்று உராய்வதுடன் நகர்ந்தும் செல்கிறது.



இந்த நிலத்தட்டு கள் ஒரு வருடத்திற்கு ஒரு செ.மீ. முதல் சுமார் 13 செ.மீ. வரை நகர்கிறது. இது நமது உலக வேகத்திற்கு மிக நுண்ணியதாக இருந்தாலும் இந்த நிலத்தட்டுகளின் லேசான உராய்வும் கூட பெரும் நிலநடுக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. ஒரு நில நடுக்கம் நிலச்சரிவுகளையும் சிலசமயம் எரிமலை செயற்பாட்டையும் அதிகரிக்கச் செய்யும்.

ஒரு நிலநடுக்கத்தின் அளவுக்கு வரையறை ஏதுமில்லை என்றாலும் வரலாற்றில் பதிவான மிக பெரிய நிலநடுக்கங்கள், 9.0 ரிக்டருக்கும்கூடுதலானவை பெரும் பாதிப்பை ஏற்படுத்துவன ஆகும்.

ஐரோப்பாவும் ஆசியாவும் இணைந்த நிலப் பரப்பாக காணப்பட்டாலும் இரண்டும் தனித் தனி தட்டுகளில் அமைந்துள்ளன. இந்தியா உள்ளிட்ட தெற்காசியப் பகுதி ஆசிய தட்டில் இல்லாமல் தனித்தட்டாக அமைந்துள்ளது. இதனாலேயே இது இந்தியத் துணைக் கண்டம் என்றழைக்கப்படுகிறது.

மேலும் இந்திய நிலத் தட்டு, ஆசிய நிலத் தட்டு ஆகிய இரண்டும் வடக்கு நோக்கி நகர்கின்றன. இதில் ஆசிய தட்டை விட இந்திய தட்டு வேகமாக நகர்வதால், இந்திய தட்டு ஆசிய தட்டை மோதி அந்த அழுத்தத்தில் உருவானதே இமய மலைப் பிரதேசம். இமய மலை இன்னும் வளர்ந்து கொண்டிருப்பதன் காரணமும் இது தான்.

இரு நிலத்தட்டுகளின் அழுத்தத்தால் இமய மலைப் பகுதி வளரும் பொழுது உராயும் பாறைகள் அசைந்து கொடுப்பதால் இப்பகுதி நிலநடுக்கம் ஏற்பட அதிக வாய்ப்புள்ள பகுதியாக கருதப்படுகிறது. பல கோடி வருடங்களுக்கு முன்பு ஆசியாவும் ஐரோப்பாவும் இணைந்து இருந்தது. இது யூரேசியா என்று அறிவியலாளர்களால் கூறப்படுகிறது. ஒரு பெரிய பூகம்பத்தால் தான் ஆசியாவும் ஐரோப்பாவும் தனித் தனி கண்டங்களாக பிரிந்ததாகக் கூறப்படுகிறது. எனினும் இதற்கான தெளிவான ஆதாரங்கள் இல்லை.

நிலநடுக்கம் மூன்று வகையான புவித்தட்டு அசைவுகளால் ஏற்படும். சாதாரண முறை, மேற்தள்ளல் முறை மற்றும் சமாந்தர அசைவு என்பனவே அவையாகும். சாதாரண மற்றும் மேற்தள்ளல் முறைகளில் ஒரு புவித்தட்டு மேல் நோக்கியும் மற்றையது கீழ்நோக்கியும் அசையும். சமாந்தர அசைவில் இரண்டு புவித்தட்டுக்கள் சமாந்தரமாக உராய்வுடன் செல்லும்.

இவ் அனைத்து புவித் தட்டு அசைவுகளும் புவியின் மேலோட்டுக்களுக்குக் கீழுள்ள உருகிய பாறைக் குழம்பின் அசைவுகளாலேயாகும். புதிதாக புவி மேலோடு உருவாகும் இடங்களான புவித் தட்டு விலகற் பிரதேசங்களில் சாதாரண முறை அசைவு இடம் பெறும். இம் முறையில் ஏற்படும் நில நடுக்கம் பொதுவாக 7 ரிக்டரைத் தாண்டாது. மேலெழும்பல் அசைவு முறையால் ஏற்படும் நிலநடுக்கங்களே அதிக ரிக்டர் அளவோடு அதிக அழிவையும் ஏற்படுத்துவனவாகும். புவித் தட்டு அசைவுகளைத் தவிர பாறைகளின் அசைவுகளால் சிற்சிறு நில நடுக்கங்கள் ஏற்படும்.

ஒவ்வொரு வருடமும் 5,00,000 நில நடுக்கங்கள் புவியில் ஏற்படுகின்றன. இவற்றில் 1,00,000 நிலநடுக்கங்கள் மக்களால் உணரப்படுகின்றன. புவியின் அனைத்துப் பகுதிகளிலும் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. எனினும் பேரழிவை ஏற்படுத்தும் நிலநடுக்கங்கள் அரிதாகவே ஏற்படுகின்றன. உலகின் 90% இற்கும் அதிகமான நிலநடுக்கங்கள் பசுபிக் பெருங்கடலை அண்டிய பகுதிகளிலேயே உருவாகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் பூமியின் மிக ஆழத்தில் ஏற்படும் மாற்றத்தின் வெளிப்புற விளைவே நிலநடுக்கம் ஆகும்.

### ரிக்டர் அளவு என்றால் என்ன?

ரிக்டர் அளவு (Richter magnitude scale) என்பது நில அதிர்வுகளை அளவிடப் பயன்படுத்தப்படும் ஓர் அளவுத்திட்டம் ஆகும். அமெரிக்க நில அதிர்வுவியலாளர் சார்லஸ் ரிக்டர் 1935 ஆம் ஆண்டில் முதன்முதலாக நில அதிர்வுகளுக்கு நில அளவுகளை வரையறுத்தார். இது தரையில் ஏற்ப டும் நில அதிர்வின் அலை உயரத்தைக் கணிக்கும்.

இதன் ஓர் அலகு அதற்கு முந்தைய அலகு அளவை விடப் பத்து மடங்கு அதிக அதிர்வுகளைக் கொண்டதாக இருக்கும். நில அதிர்வுகள் ஒரு மில்லிமீற்றருக்கும் குறைவான அளவிலிருந்து பல மீற்றர்கள் வரை மிக அதிக மாறுபாடுகளைக் கொண்டதாக இருப்பதால், அவர் அளவுகளை இவ்வாறு வரையறுக்க வேண்டியிருந்தது.(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரும்பசிட்டியில்...

லிப்பளை ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் பலாலிப் பொலி ஸார் மற்றும் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7,104)

## கஞ்சா கலந்த...

இதன்போது 10 கிராம் 670 மில்லி கிராம் கஞ்சா கலந்த மாவா மீட்கப்பட் டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங் கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக் குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம்மாவட்ட பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவின ரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.






















விசாரணைகளின் பின்னர் குறித்த இளைஞனை நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம-7,104)

## ஹெரோயினுடன்...

ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங் கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின ருக்குக் கிடைத்த இரகசியத் தக வலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸாரால் இந்தக் கைது நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரி டம் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம-7,104)

## வீதியால்...

நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் கப்பூதுப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியிலிருந்து கப்பூது வீதியால் வடமராட்சிக்குக் குறித்த நபர் பயணித்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கத்தியைக் காட்டி அச்சுறுத்தி அவரைத் தாக்கி விட்டு அவரின் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

அரைப்பவுண் தங்கச்சங்கிலி அப கரிக்கப்பட்டதாக நெல்லியடிப் பொலி ஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. (ம-7,60)

## அரசியலை...

இல்லத்தில் இருந்து வெளியேறும் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசியலை ஒருபோதும் கைவிட மாட்டேன். அரசியல் நடவடிக்கைகள் தொடரும். நாட்டு மக்களுக்கும் வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

எம்மை உத்தியோகபூர்வ இல் லத்தில் இருந்து வெளியேறச் சொன் னார்கள். அதனால் இங்கிருந்து செல்கிறோம் எனத் தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுக்காலை மகிந்தவின் உத்தியோகபூர்வ இல்லத் திற்கு அரசியல்வாதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் ஆதரவாளர் கள் எனப் பல்வேறு தரப்பினர் வருகை தந்திருந்தனர்.

குறிப்பாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் உள்ளிட்ட பல இராஜதந்திரிகளும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (ம-7)

## சந்திரிகா...

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்த நிலையில் முன்னாள் ஜனாதி பதிகளான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தமது உத்தியோகபூர்வ இல்லங்களை விட்டு வெளியேறி யுள்ளனர். (ம-7)

## வெளியேறுவதில்...

பக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

விஜேராம இல்லத்தில் இருந்து நேற்று வெளியேறும்போது ஊடகவிய லாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் வழங்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சாதாரணமாக தாம் பெரிதாக எந்த விடயங்களையும் தெரிவிப்பதில்லை எனவும் தம்மிடம் செயல் மாத்திரமே உள்ளதாகவும் வீண் கதை எதுவு மில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் தான் அரசியலில் ஈடுபடும் நபர் இல்லையெனவும் தாம் விஜே ராம இல்லத்தில் இருந்து வெளியேறு வதில் எவ்வித துக்கமும் இல்லை என்றும் தெரிவித்தார். (ம-7)

## புலிகளின்...

கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு தெரி வித்தார்.

அவர் தொடர் ந்து தெரிவிக்கை யில்,

"பிரபாகரன் உயிருடன் இருந் திருந்தால் இன் றைய நாள் அவ ருக்கு மிகவும் மகிழ்ச்சியான ஒரு நாளாக இருந்திருக்கும்.

இன்றைய நாள் அரசாங்கத் திற்கு மிகவும் சந்தோசமான நாள். அத்தோடு தமிழீழ விடுத லைப் புலிகளின் ஆதரவாளர் களான டயஸ் போராக்களுக்கு சந்தோசமாக இருக்கும் என நினைக்கிறேன்.

சட்டத்திற்கு மதிப்பளித்து மகிந்த ராஜ பக்ஷ அவர்கள் 24 மணிநேரத் திற்குள் உத்தி யோகபூர்வ இல் லத்தில் இருந்து வெளியேறியுள் ளார். ஒரு வாரத் திற்குள் இந்த வீடு உத்தியோக பூர்வமாகக் கைய ளிக்கப்படும்.

30வருடகால யுத்தத்தினை நிறைவுக்கு கொண்டுவந்து நாட்டில் அமை தியை ஏற்படுத் திய தலைவ ருக்கு அரசாங் கம் கௌரவ மளிக்கும் விதத் தினை நாட்டு மக் கள் இன்று கண் முன்பார்க்கக் கூடியதாக இருந் தது.

சிங்கம் எங்கி ருந்தாலும் சிங்

## மூன்று பேருந்துகள் மோதுண்டு விபத்து

பலாங்கொடை மாதொலச் சந்தியில் 3 பேருந்துகள் நேற்றுக் காலை ஒன்று டன் ஒன்று மோதியதால் ஏற்பட்ட விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட 12 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் அவ்வழியாக வந்த அம் புலன்ஸ் மற்றும் ஏனைய வாகனங் களில் வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக் கப்பட்டனர்.

இவர்களில் எவருக்கும் ஆபத் தான காயங்கள் இல்லையெனத் தெரி வித்த பொலிஸார் மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

கம் தான். தங்காலையில் அவருக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படு மாயின் அதற்கான பொறுப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண் டும் என்றார். (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முன் உள்ள பொற்பதி வீதியில் 4 ½ பரப்புக் காணி வீதி முகப்புடன் சேர்ந்த நிலையில் நல்ல தண்ணீர் கிணறு, இருபக்க பாதை உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

**075 945 3391**

(5393)

## மாப்பிள்ளை தேவை

01. சுழிபுரம், இந்து, 1997, சித்திரை, MBBS, MD, Doctor பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
02. பருத்தித்துறை - அல்வாய், 1996, இந்து, அவிட்டம், Bsc, Msc, Norway பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
03. இருபாலை, 1993, இந்து, திருவோணம், Masters, Germany citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
04. புங்குடுதீவு, 1997, இந்து, அவிட்டம், Bsc, Canada பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
05. தம்பசிட்டி, 1998, இந்து, மகம், Bachelors, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
06. திருநெல்வேலி - புங்குடுதீவு, இந்து, 1996, ரோகிணி, Civil Engineer, Canada பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
07. அளவெட்டி, 1997, இந்து, மூலம், Bachelors, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
8. மானிப்பாய், 1993, இந்து, ஆயிலியம், MBBS, Doctor, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
9. சாவகச்சேரி, 1990, இந்து, உத்திரட்டாதி, Graduate, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
10. காரைநகர், 1992, இந்து, மிருகசீரிடம், Masters, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(5396)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com

---

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**13.09.2025**

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
**Business Level I,II**
Qualification:-G.C.E. A/L 3 Passes
(Medium - Tamil & English)

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
**DBF & HDBF**
Qualification:-G.C.E. A/L 3 Passes
(Medium - Tamil & English)

Further Details:- Jaffna College
Undergraduate Dept.
Hospital Road,
Jaffna.
0212223382
0774405917

JAFFNA COLLEGE CEYLON

(C-3845)

---

SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

**SPACE FESTIVAL 2025**

**12 SEP**
**2025 FRIDAY 09.00 AM**



VENUE : SLIIT NORTHERN UNI, JAFFNA

(C-3852)

மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமான விண்வெளி விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களின் சங்கமம்

SPACE FEST 2025

SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna

021 7534 807
northernuni.lk | apply@northernuni.com

---

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5329)

**076 663 3199**

---

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3855)

**V2 TRAVELS** 076 1410725 / 076 8226236
v2vacancies@gmail.com

---

## ஆங்கில வகுப்புக்கள்

தரம் 6 தொடக்கம் G.C.E (O/L) வரையான வகுப்புக்களுக்கான ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

திரு. **A.பாலசந்திரன்**
B.A in English & ELT(OUSL)
Special Trained English

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(அரசடி சிவகாமி அம்மன் கோயில் அருகில்)

**077 479 2567**

(5390)

---

## வீடு விற்பனைக்கு

வேம்படி மகளிர், யாழ். மத்திய கல்லூரியில் இருந்து 100m இல் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

**076 342 4705**

(1542)

---

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

---

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் மானிப்பாயில் 15 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

### நிலப்பரப்பு

- மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 2 ஆவது காணி.
- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து 600m தூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- ஒரு பரப்பின் விலை 55 இலட்சம்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு : **ஜெயம்**

(5398)

**077 814 7389 / 077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.